**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், சிங்கம்புணரி**

முன்னிலை: திருமதி G. அபர்ணா M.A.,B.Sc.,LLM.,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், சிங்கம்புணரி
2026– ஆம் ஆண்டு மார்ச் 13– ஆம் நாள் வெள்ளிக்கிழமை

**Crl.M.P. No.72/2026**

*****

வீரையா (72/26)
த/பெ.இராமையா,
1–2–57–1–5 செல்வ விநாயகர் கோவில் வீதி,
சிங்கம்புணரி,
சிவகங்கை மாவட்டம். ... மனுதாரர்/எதிரி எண்.1

/எதிர்/

அரசுக்காக: வன சரக அலுவலர்,
வன உயிரின குற்ற வழக்கு
WLOR No.1/2026
u/s.தமிழ்நாடு வன உயிரின பாதுகாப்பு சட்டம்
1972(திருத்தப்பட்டது 2023) பிரிவு 2(1),(15),
9, 39, 48, 50 .... எதிர்மனுதாரர் / குற்றமுறையீட்டாளர்

இம்மனு 10.03.2026ம் தேதியன்று இந்நீதிமன்றத்தில் கோப்புக்கு எடுக்கப்பட்டது. மனுதாரர்/எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.எல்.ரமேஷ் அவர்களும் எதிர்மனுதாரர்/குற்றமுறையீட்டாளர் தரப்பில் அறிவார்ந்த அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை–1 அவர்களும் ஆஜராகியும், இம்மனு 13.03.2026 ஆம் தேதியன்று இறுதி விசாரணைக்காக வந்தபோது இருதரப்பு வாதங்களை கேட்டும் வழக்கு கோப்புகளை பரிசீலனை செய்தும் இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்...

**உத்தரவு**

1. பிணை மனு பரிசீலிக்கப்பட்டது. இம்மனு, மனுதாரர்/எதிரி தரப்பில் பிரிவு 480 BNS–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இருதரப்பு வாதங்களும் கவனத்தில் கொள்ளப்பட்டன, வழக்கு கோப்புகள் அனைத்தும் கவனமாக பரிசீலிக்கப்பட்டன.

2. இவ்வழக்கில் வன உயிரின குற்ற வழக்கு எண்:1/2026, மிழ்நாடு வன உயிரின பாதுகாப்பு சட்டம்1972(திருத்தப்பட்டது 2023) பிரிவு 2(1),(15), 9, 39, 48, 50 –ன் கீழான வழக்கில் எதிரி 07.03.2026 ம் தேதியன்று கைது செய்யப்பட்டு, அது முதல் நீதிமன்றக் காவலில் இருந்து வருகிறார் என்றும், எதிரியை பினணயில் விட வேண்டப்படுகிறது.

3. எதிர்மனுதாரர்/குற்றமுறையீட்டாளர் தரப்பில் இவ்வழக்கின் எதிரியை பிணையில் விடும்பட்சத்தில் சாட்சிகளை விசாரணை மேற்கொள்ள இடையூறாக இருப்பார்கள் என்பதாலும், 4,5 எதிரிகளை பிடிக்க

நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாலும் பிணையில் விட கடுமையாக ஆட்சேபனை உள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

4.எதிர்மனுதாரர்/குற்றமுறையீட்டாளர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மருத்துவ அறிக்கையில் இவ்வழக்கின் 14 தேவாங்குகள் கைப்பற்றப்பட்டதில் 08.03.2026 ம் தேதி காலை சுமார் 8.30 மணிக்கு ஒரு பெண் தேவாங்கு இறந்து விட்டநிலையில், வனகால்நடை பராமரிப்பு அலுவலர், திருவில்லிபுத்தூர் மேகமலை புலிகள் காப்பகம் மதுரை அவர்களின் அறிவுரையின் படி இறந்த பெண் தேவாங்கையும், உயிருடன் இருந்த 8 பெண் தேவாங்குகளையும், 4 ஆண் தேவாங்குகளையும் திண்டுக்கல் வன மண்டலம் திண்டுக்கல் வனகோட்டம், அழகர்கோவில் வனசரகத்திற்கு கொண்டு செல்லப்பட்டு உடற்கூராய்வு செய்யப்பட்டு சென்னைக்கு மரபணு களஞ்சிய பயன்பாட்டிற்காக அனுப்பி வைக்க 12.03.2026 ம் தேதி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் எஞ்சிய பாகங்களை அழகர்கோவில் வனச்சரக அலுவலக வளாகத்திலேயே புதைக்கப்பட்டது என்றும் மற்ற 12 தேவாங்குகள் உயிருடன் நல்ல நிலையில் மரத்தில் ஏறி அமர்ந்து கொண்டன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

5. இருதரப்பு வாதங்களும், வழக்கு கோப்புகளும் பரிசீலிக்கப்பட்டது. வன உயிரின குற்ற வழக்கு எண்:1/2026, u/s.தமிழ்நாடு வன உயிரின பாதுகாப்பு சட்டம் 1972(திருத்தப்பட்டது 2023) பிரிவு 2(1),(15), 9, 39, 48, 50ன் படியான குற்றத்திற்கு பிரிவு 51 –ன் கீழான இவ்வழக்கில் எதிரி 07.03.2026 ம் தேதியன்று கைது செய்யப்பட்டு, அது முதல் நீதிமன்றக் காவலில் இருந்து வருகிறார். அரசு தரப்பு வழக்கானது எதிரி தேவாங்குகளை உயிருடன் பிடித்து விற்பனைக்காக கூண்டில் அடைத்து வைத்திருந்ததாக கூறப்பட்டுள்ளது.

6. இவ்வழக்கில் தேவாங்குகள் கூண்டுடன் கைப்பற்றப்பட்டுள்ளதை மருத்துவரின் ஆலோசனை பெற்று அய்யலூர் தேவாங்கு சரணாலயத்திற்குள் நல்லமுறையில் விடுவதற்கு உத்தரவிடப்பட்டுள்ள படி ஒரு தேவாங்கு இறந்து விட்டபடியால் உடற்கூராய்வு செய்யப்பட்டு சென்னைக்கு மரபணு களஞ்சிய பயன்பாட்டிற்கு அனுப்பி வைக்கப்பட்டதாகவும், 12 தோவாங்குகள் மருத்துவ பரிசோதனை செய்யப்பட்டு நல்ல நிலையில் 12.03.2026 ம் தேதி மாலை சுமார் 6.00 மணியிலிருந்து தானாக கூண்டிலிருந்து வெளியேறி இரவு 7.30 மணிக்குள் உயிருடன் நல்ல நிலைமையில் மரத்தில் ஏறி அமர்ந்து கொண்டதாக வனசரக அலுவலர் தெரிவித்துள்ளார்.

7. அரசு தரப்பு வழக்கானது 1வது எதிரியான வீரையா கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் 06.03.2026 ம் தேதி காலை சுமார் 11.45 மணியளவில் சிங்கம்புணரி பிளாசா திருமண மண்டபம் பின்புறம் உள்ள வகிதாபானு என்பவர் வீட்டின் மேல்மாடி முதல் தளத்தில் வாடகைக்கு வசிக்கும் தனக்கு பழக்கமான மாரியம்மாள் என்பவர் வீட்டில் தங்களது

தலைமையிலான குழு தன்னை பிடித்து விசாரித்தார்கள் என்றும் சென்னையில் வசிக்கும் நிபேந்திரகுமாரி ஒரு வருட காலமாக ரியல் எஸ்டேட் பிஸ்னஸ் செய்து வந்ததால் தனக்கு பழக்கம் இருந்தது என்றும் மருத்துவத்திற்காக தோவாங்குகள் தேவைப்படுவதாகவும் அதற்கு தொகை தருவதாகவும் கூறினார் என்றும் வாக்குமூலம் அளித்துள்ளார். மேலும் 2 வது எதிரி நிபேந்திரகுமாரி என்பவர் தான் சிங்கம்புணரி, பிளாசா மண்டபத்தின் பின்புறம் வகிதாபானு என்பவர் வீட்டின் மேல்மாடி முதல் தளத்தில் வாடகைக்கு வசித்து வரும் மாரியம்மாள் வீட்டில் இருந்த போது போலீசார் பிடித்ததாக கூறப்பட்டுள்ளது. எனவே மேற்படி மாரியம்மாள் என்பவரை இவ்வழக்கில் எதிரியாக சேர்க்கவில்லை.

8. அரசு தரப்பு வழக்கானது எதிரி வீரையா என்பவர் கொடுத்த வாக்குமூலத்தில் தேவாங்குகள் மருத்துவத்திற்கு தேவைப்படுவதாக 2 வது எதிரி நிபேந்திரகுமாரி என்பவர் கூறியதால் இளையராஜா மற்றும் அவரது மனைவி ராணி ஆகியோர்களிடம் சொல்லி வைத்ததில் ராணி அவரது சகோதரர் அர்ஜுனன் மூலம் 4 தேவாங்குகளும், இளையராஜா 9 தேவாங்குகளும் பிடித்து வைத்திருப்பதாக சொல்லி கூண்டில் வைத்து மாரியம்மாள் வீட்டில் வைத்து விட்டு சென்று விட்டார்கள் என்று கூறப்பட்டுள்ள நிலையில், மேற்படி தேவாங்குகளை யார் பிடித்து கொடுத்தார்கள் என்பது குறித்து அரசு தரப்பில் குறிப்பிடவில்லை. மேலும் இவ்வழக்கில் தேவாங்குகளை கூண்டில் அடைத்து மாரியம்மாள் வீட்டில் வைத்ததாக கூறப்படும் ராணி, இளையராஜா ஆகியோர்களை இவ்வழக்கில் இதுவரை கைது செய்யப்படவில்லை.

9. அரசு தரப்பில் எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள u/s.தமிழ்நாடு வன உயிரின பாதுகாப்பு சட்டம் 1972(திருத்தப்பட்டது 2023) பிரிவு 2(1),(15), 9, 39, 48, 50ன் படியான குற்றத்திற்கு பிரிவு 51ன் கீழான குற்றத்திற்கு 3 வருடத்திற்கு குறையாத சிறை தண்டனையும், ரூ.25,000/- ரூபாய்க்கு குறைவில்லாத அபராத தொகையுடன் தண்டிக்கப்பட வேண்டிய குற்றமாகும்.

10. அரசு தரப்பில் சமர்பிக்கப்பட்டுள்ள மருத்துவ அறிக்கையில் இவ்வழக்கில் ஒரு தேவாங்கு இறந்து விட்டபடியால் உடற்கூராய்வு செய்யப்பட்டு சென்னைக்கு மரபணு களஞ்சிய பயன்பாட்டிற்கு அனுப்பி வைக்கப்பட்டதாகவும், 12 தோவாங்குகள் மருத்துவ பரிசோதனை செய்யப்பட்டு நல்ல நிலையில் 12.03.2026ம் தேதி மாலை சுமார் 6.00 மணியிலிருந்து தானாக கூண்டிலிருந்து வெளியேறி இரவு 7.30 மணிக்குள் உயிருடன் நல்ல நிலைமையில் மரத்தில் ஏறி அமர்ந்து கொண்டதாக கூறப்பட்டுள்ளதாலும், இவ்வழக்கின் தன்மை மற்றும் சூழ்நிலைகளைக் கருத்திற்கொண்டு எதிரி கீழ்கண்ட நிபந்தனைகளின் பேரில் பிணையில் விட இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

**நிபந்தனைகள்:**

1. எதிரி தனக்காக ரூ.10,000/- பெறுமானமுள்ள பிணைமுறியையும், அதே தொகைக்கு ஈடாக இரத்தம் சம்பந்தப்பட்ட இரண்டு ஜாமீன் வழங்கவும் உத்தரவிடப்படுகிறது.

2. எதிரி தினமும் காலை 10.00 மணிக்கும் மாலை 5.00 மணிக்கும் இந்நீதிமன்றத்தில் ஆஜராகி மறு உத்தரவு வரும் வரை கையொப்பம் செய்ய வேண்டும்.

3. இவ்வழக்கின் புலன் விசாரணையில் குறுக்கிடக் கூடாது.

4.எதிரி சாட்சிகளை கலைக்க முயற்சி செய்யக் கூடாது.

5. எதிரி மீண்டும் இதே குற்றத்திலோ வேறு குற்றத்திலோ ஈடுபடக் கூடாது.

*இந்த உத்தரவு என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் சுருக்கெழுத்து தட்டச்சு செய்து, பின்னர் என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 13-ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்ட உத்தரவாகும்.*

/உண்மை நகல்/

(ஒம்/-ஜி.அபர்ணா)

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
சிங்கம்புணரி